"அகாமுதலவெழுத்தெல்லாம் ஆதி பகவன்முதற்றேயுலகு"

புதினப்பத்திரிகையாகப் பதிவுசெய்யப்பட்டது.

Registered at the G.P..O

# சுதேசநாட்டியம்.

## THE JAFFNA NATIVE OPINION.

"யதார்த்தவாதி வெகுஜன விரோதி"

மாசமிருமுறை பகிரங்கஞ் செய்யப்படும்

தருமமே செயம் சத்தியமே நித்தியம்

மலர் 37 } யாழ்ப்பாணம் வயாவிளான், வெகுதானிய ௵ மார்கழி ௴ கசு-ந் வ (31-12-38) சனிக்கிழமை { இதழ் 6

### தோத்திரம்

பாலனுக் காயன்று பாற்கட லீந்து பணைத்தெழுந்த
ஆலினிற் கீழிருந் தாரண மோதி யருமுனிக்காய்ச்
சூலமும் பாசமுங் கொண்டு தொடர்ந் தடர்ந் தோடிவந்த
காலனைக் காய்ந்த பிரான்கட வூருறை யுத்தமனே

திருநாவுக்கரசுசுவாமிகள்

# வடமாகாணத்துள்ள சில இடப்பெயர்களின் வரலாறு.

திரு. ச. குமாரசுவாமிப்பிள்ளை

உரிமைபதிவு

(முன்தொடர்ச்சி)

நீலாவத்தை- நீலா — மேற்படி
(புலோலி)
சுப்பணுவத்தை- சுப்பணு- மேற்படி
(தெல்லிப்பழை)
களுவாவத்தை- களுவா- மேற்படி
(மூலவை)
குரும்பவத்தை }
குறும்பவத்தை } குறும்ப குறும்பன்
(சுதுமலை) சுதுமலையிலே குறும்பர் தோட்டமெனப் பெயரியவிடமொன்றிருப்பதும் ஈங்கு குறிக்கத்தகும்.

நயினுவத்தை- நயினு — மேற்படி
(வாத்துப்பழை)
சிங்காவத்தை- சிங்கா — மேற்படி
(தெல்லிப்பழை)
அவலியவத்தை அவலியா- மேற்படி
(தெல்லிப்பழை)
முக்கியவத்தை– முக்கிய–முக்குவன்.
[சுதுமலை]
குறும்பிளாவத்தை- குறும்பலாகே-
[பண்டத்தரிப்பு] (குறும்பனுடைய.
வடுவாவத்தை- வடுவா-தச்சன்.
(சுன்னுகம், திருநெல்வேலி)

பத்தாவத்தை- பத்தா— பல்லக்குக்காவுதல், ஆனைக்கு உணவுதேடுதல், [தெல்லிப்பழை] தெருக்கூட்டுதல், ஆகிய இழிதொழில்செய்யுஞ் சாதியான். பதுவா என்னும் பெயராம். பச்சன் எனவும் அறியப்படுவன்.

அம்பட்டாவத்தை- ஆம்பட்டயா- அம்பட்டன்.
(தெல்லிப்பழை)
வவுணுவத்தை- வமுணு- பிராமணன்.
(தெல்லிப்பழை)
அறுவத்தை அறுவ- குயவன்.
[தெல்லிப்பழை]
கம்பிராவத்தை- கம்புரா- கன்னுன், கொல்லன்.
[புலோலி, தெல்லிப்பழை]
கொவ்வாவத்தை கோவ்வா- பசுக்காப்போன்.
(பலாலி)
கொவ்விவத்தை- கோவி,- கோவியா- வெள்ளாளன்.
[பலாலி]
வல்லியா- வல்லியா- 'உறேடியன்' எனப்பெயரிய சாதியான்.
(காணவாய்)
பத்தினிவத்தை- பத்தினி- கண்ணகியம்மன்.
(நவாலி)
காளியவத்தை- காலி- காளிதேவி.
(அராலி)
சக்கவத்தை- சக்க- புத்தன், இந்திரன்.
[சண்டிருப்பாய்] சக- அரசன், சக்கரம்.
சக்கலாவத்தை- சக்கலாகே- புத்தனுடைய.
(சங்கானை) சகலாகே- அரசனுடைய.
மாலியவத்தை- மாலி- மாலைகட்டுவோன்.
(சங்கானை) மாலிகவ, மாலிகய- மாளிகை.
மணியூாவத்தை- மணிஇவுரவத்த- இரத்தினமுள்ளதோட்டம். மணி
[மாதகல்] இவுரவத்த- மணி என்னும் பூமரம் மல்கியதும் கரையிலுள்ளதுமானகாடு, தோட்டம்.

உடுமலர்வத்தை- உடுமெஹலே- மேல்வீடு. உடு-மலவத்தை மேட்டு
(மாதகல்) வேடன்தோட்டம், மேட்டுப்பூந்தோட்டம்.
கொட்டயாவத்தை- கோட்டயா- கொட்டன், கட்டையன்.
(அராலி, தொல்புரம், அளவெட்டி, பலாலி.)
கொட்டணங்கவத்தை- கோட்ட- குறுத்தகட்டை.
(அல்வாய்) நங்கி- தங்கை.
குறணங்கவத்தை- குற- குறுத்த
(பண்டத்தரிப்பு) நங்கி- தங்கை.
தொலிவத்தை தோலியா- தோளாச்சுமப்போன்.
(தெல்லிப்பழை) தோலி, தோளி, தோளா.
சூணுவத்தை- சூணு- மகள், ஆடுமாடு அடிக்குமிடம்.
(தெல்லிப்பழை)
மூக்கருவத்தை- மூக்க- மூகை, ஊமையன். ருவத்த- கள்ளுத்தோட்டம்.
(தனக்காரக்குறிச்சி)
தோளாவத்தை- தோலாயா- தோளாக்காவி. தோலாவ- தோளா
(மயிலிட்டி) தோலி.
உதுவாவத்தை- உதுமா- பெரியோன், உத்தமன்.
(பலாலி)
இராமந்தவத்தை- ருமேத்த- கள்ளுவைத்த,
(பெரியவிளான்) ருமந்தயா- கள்ளுவெறியன், பேய்மூடன்.

யாழ்ப்பாணத்துப் பாவை வழக்கினும், மலையாளத்து மரபு வழக்கினும் பயின்றுவருவதும், ஆறும்வேற்றுமைப் பொருள் பயப்பதுமான 'ரை'காரவுருபேற்ற இராமன் என்னுஞ் சொல்லானது இரு தகரத்தையுடைய 'வத்த' என்னும் வார்த்தையின் சேர்க்தியாலே இராமந்த எனச் சிதைந்திருப்பினுமிருக்கும். (உடைய என்பதன் யகரம்கெட்டுநின்ற 'உடை'யினது முதற்குறையான டை என்பது ரை எனத் திரிந்ததுபோலும்.)

மண்டாவத்தை- மண்டா- வண்டா என்பதன் விகாரம்போலும்.
(சில்லாலை) மண்ட- ஆமணக்கு, கள்.
கமறுவத்தை- கமருல- கிராமத்தலைவன்.
(தெல்லிப்பழை)
இராமலாவத்தை- ருமலாகே- இராமனுடைய.
(தெல்லிப்பழை) ருமல- பேய்வேடன்.
கொற்றுவத்தை- கோற்று- கட்டையன்.
(காணவாய்)
களுத்தாவத்தை- களுதா- கழுதை.
கோணுவத்தை- கோணு- மரை
(மயிலிட்டி)

கிலிங்கலாவத்தை- கிறிங்கு-மரை.
(கோண்டாவில்)
[வட்டுக்கோட்டை, நவாலி]
கொற்றியவத்தை-கோற்றியா-புலி
(சுன்னுகம், சங்கானை, புலோலி, பலாலி)

சல்லியவத்தை சல்ய-முட்பன்றி, ஒருமுட்செடி.
(சங்கானை)
கல்லறவத்தை- கலறவ-புறு, குயில்.

(தொடரும்)

ஆற்றின் வருந்தா வருத்தம் பலர்நின்று போற்றினும் பொத்துப் படும்



துதி வெண்பா

ஞானஞ் சுகதியம் நல்லாயுள் தாவயவை
ஆனைமுக வாகுமரா ஆறுமுகா-ஆனந்தப்
பேர்க்குமர னச்சியந்த்ரம் பீடுபெற்றுநிற்
சேர்த்தியுடன் வந்து செகம். [சுவெற்குச்

# சுதேச நாட்டியம்

யாழ்ப்பாணம், வயாவிளான்
வேகுதானியஞு மார்கழிமீ கசுங்வ

## உலக சமாதானம்

நத்தார்த் திருநாளை முன்னிட்டுக் கோழும்பு பிஷப் அவர்கள் ஓர் செய்தி விடுத்துள்ளார்கள். அதன்கண் நல்லெண்ணமுள்ள மனிதர்களிடையேதான் சமாதானமேற்படக்கூடுமென அவர் கூறுகின்றார். நத்தார்த் திருநாளன்று அதிகாலையில் கிறீஸ்தவ ஆலயத் திருமணிகளெல்லா மொலித்தன. செபங்களும் பிரார்த்தனைகளும் நிகழ்ந்தன. இவையெல்லாம் மனிதசமூகத்தினரின் நல்வாழ்வைக்கோரியே நிகழ்ந்தன. இவை ஒருபுறமிருக்க உலகத்தின் இப்போதைய நிலைமையை நோக்குமிடத்து உலக சமாதானம் எவ்வளவு நிச்சயமாகத் தோற்றவில்லையெனத் தெரியவருகிறது. சர்வாதிகாரிகள் மாத்திரந்தான் உலக சமாதானத்துக்கு முரணானவர்களென்றுகொள்ளுதல் கூடாது. முன்னொருபோது ஏனைய வல்லரசுகளால் நசுக்கப்பட்டு வீழ்நிலையடைந்த ஓர் சாம்பிராச்சியத்தை அதன் முன்னைய நிலைமைக்குக் கொண்டுவருவதற்காகவே தம்மைக் கடவுள் அனுப்பியுள்ளாரெனச் சர்வாதிகாரிகளிலொருவர் கூறுகின்றார். சனநாயக ஆட்சியுள்ள தேசங்களிலும் ஒருசிலர் இருந்துகொண்டு தமது வணக்குறைவான பேச்சுக்களினும், செய்கைகளினும் சமாதானத்துக்குப் பங்கம்விளைத்து வருகின்றனரென்பதும் கண்கூடு. உலகம் எப்பொழுதும் தமது பாடத்தைப் படிக்குமென பிஷப் அவர்கள் சேட்பதில் ஆச்சரியமேதுவுமில்லை. அப்பாடத்தைப் படிக்கும் முயற்சியை உலகம் கைசோரவிடக்கூடாது.

நத்தார் என்பது வெறும் உண்டாட்டுக் களியாட்டங்களுக்குரிய பண்டிகையாகவே இக்காலத்தில் கருதப்படுகின்றது. நத்தார் மாத்திரமல்ல எந்தச்சமயத்து எந்தக்கொண்டாட்டமும் நாளடைவில் தன் நோக்கத்தையும் கருத்தையும் கொள்கையையும் இழந்துகொண்டே வருகின்றது. ஒரு கன்னத்திலடித்தால் மற்றக்கன்னத்தையும் திருப்பிக்கோடு என்று போதித்த யேசுநாதனை வழிபடும் மக்கள் அவருடைய போதனைகளுக்கு முற்றும் நேர்விரோதமான வழிகளிலேயே செல்கின்றனர். ஒரு இராச்சியத்தை இன்னொரு இராச்சியம் பிடித்து விழுங்கிவிடுகின்றது. இந்தநிலையில் சமாதானமெங்கே? கிறீஸ்தவ சாம்பிராச்சியங்களாகிய ஐரோப்பிய வல்லரசுகள் கிறீஸ்தவக் கொள்கையை அடியோடு மறந்து அரசியல் நடாத்துவது வருந்தத்தக்கதோர் செய்தியேயாகும். யேசுநாதரின் ஆத்துமசக்தியைக் கைவிட்டு ஆயுதபலத்தையே ஐரோப்பிய வல்லரசுகள் தமக்குத் துணையாகக் கொண்டுள்ளன. ஆயுதபலத்தைக்கொண்டு ஒருதேசத்தை இன்னொருதேசம் நாசமாக்குவது உண்மையான நாகரீகமாகமாட்டாதென்பது அறிஞர் பலர்க்கும் ஒத்தபேற்றித்தாய அபிப்பிராயமாக விளங்குகின்றது. ஆதலின் சமாதானத்தைநாடியே இறைவனை வேண்டுவோமாக.

## மதிப்புரை

### சுப்பிரமணிய சாஸ்திரிகள் பிரமாதிவருட வாக்கிய பஞ்சாங்கம்

யாழ்ப்பாணம் — பருத்தித்துறை, சமஸ்கிருததிராவிட பண்டிதரும், சோதிடகணித சித்தாந்தியும், வித்தியாவிருத்தித் தருமகர்த்தருமாகிய பிரமஸ்ரீ ச. சுப்பிரமணிய சாஸ்திரிகள் அவர்களால் வரும் பிரமாதி வருடத்துக்கெனக் கணிக்கப்பெற்று மேற்படியார் சகோதரர் பிரமஸ்ரீ ச. சோமசுந்தரஐயர் அவர்களால் தமது கலாநிதியந்திரசாலையிற் சுத்தமாக அச்சிடப்பெற்று வெளியான பஞ்சாங்கப் பிரதியொன்று நமக்குக் கிடைத்தது. முன்னதாகவே இப்பஞ்சாங்கம் வழமைபோலச் சுத்தமான கணித முறைப்படி வெளிவந்துள்ளது.

பிரதியொன்றின் விலை சதம் 25. தேவையானோர் மேற்படி சோமசுந்தரஐயரிடத்திலும், எமது அச்சியந்திரசாலையிலும், மற்றும் பிரபல புத்தகசாலைகளிலும் பெற்றுக்கொள்ளலாம். எமக்கனுப்பிய பிரதியை அன்புடனேற்றும்.

### கலாநிதி யந்திரசாலைத் தேதி அட்டவணை

1939-ம் ஆண்டுக்குரிய தேதியட்டவணையொன்று பருத்தித்துறை கலாநிதி யந்திரசாலையாரிடமிருந்து வரப்பெற்றும். இது ஏனைய வருடங்களைக் காட்டிலும் மிக அழகாக அச்சிடப்பெற்று, வெளி வந்துள்ளது. 12 மாதங்களுக்கும் 12 ஒற்றைகளில் விரத திருநாட்கள், தமிழ் இங்கிலீஷ் திகதி முதலியன பிரசுரிக்கப்பட்டிருக்கின்றன. மேற்படி அச்சியந்திரசாலையாரால் வெளியாகும் "சுப்பிரமணிய சாஸ்திரிகள் பஞ்சாங்கம்" தொகையாக எடுப்பிப்பவர்களுக்கு மேற்படி தேதியட்டவணையொன்று அளிக்கப்படும். தேவையானோர் மேற்படி அச்சியந்திரசாலையாருக்கு எழுதிப் பெற்றுக்கொள்க. எமக்கனுப்பிய பிரதியை அன்புடனேற்றும்.

## "சிவதொண்டன்" ஐந்தாவது ஆண்டு மலர்

யாழ்ப்பாணம், வண்ணார்பண்ணையிலிருந்து திங்கள்தோறும் வெளியாகும் மேற்படி பத்திரிகையின் ஐந்தாவது ஆண்டுமலரொன்று கிடைக்கப்பெற்றும். இதன் ஆசிரியர் திரு. க. கி. நடராஜன் அவர்களாவர்.

இது பல அரிய பெரிய விஷயங்களையுள்ளடக்கி, 18 பக்கங்களுடன், சிறந்த காகிதத்தில் அச்சிடப்பெற்று வெளிவந்துள்ளது. இப்பாலன் நீடூழிகாலம் நின்று நிலவுமாறு கருணையங்கடலாகிய சிவசுப்பிரமணியப் பெருமான் திருவருள் முன்னிற்பதாக.

### வாழ்த்து

வெண்பா

அண்டர் முனிவோ ரரசரன்பர் வாழிசிவ
தொண்டனெனும் பத்திரமித் தொல்புவிமேல்—எண்டிசையும்
சென்றோங்கி வாழியின்பச் செந்தமிழ்நற் சைவநெறி
நன்றுநிதம் வாழி நலம்.

கலித்துறை

எந்தை சிவனரு ளாற்சிவ தொண்ட னெனுஞ்சிறுவன்
ஐந்து வயதை யடைந்தனன் மேலுந்த னன்பரிடஞ்
சிந்தை மகிழ்வுடன் சென்றுநற் றேன்மொழி செப்பிநின்று
சந்ததம் வாழுக நீடாயுள் பெற்றிந்தத் தாரணியே.

எண்சீர் விருத்தம்

சீராரும் நவாலிநகர் நிவாசன் பன்னூல்-தேர்ந்தறிஞ ரவைக்களத்தும் செல்லு மேலோன்
ஏராரும் சிவதொண்ட னெனுந்தி ருப்பே-ரெய்துமிந்தப் பத்திரத்தை யினிதிளக்கிப்
போராருஞ் சிவாகமநூற் பெருமை யெல்லாம்-பிறங்கவைத்து நிற்கின்றான் யாரோ வென்னில்
தாராரும் நடராஜன் புலமை யன்பு-சாந்தமுயர் நீதியுளோன் தழைக மாதோ.

## அகத்தியமுனிவர் அருளிச்செய்த வைத்திய பூரணம் 205.

யாழ்ப்பாணத்து வைத்தியநூல் வெளியீட்டின் 13-வது வெளியீடாகவுள்ள மேற்படி நூற்பிரதியொன்று நமக்குக் கிடைத்தது. இதுபலஏட்டுப்பிரதிகளைக்கொண்டு பரிசோதிக்கப் பெற்று வைத்திய நூற் பதிப்பாசிரியர் ஸ்ரீமான். ஐ. பொன்னையா அவர்களால் தமது திருஞானசம்பந்தர் அச்சுநிலையத்திற் பதிப்பிக்கப்பெற்று வெளிவந்துள்ளது.

25 சூத்திரங்களைக் கொண்ட இப்பிரதியில் பற்பவகைகளும், நீறுவகைகளும், தைலவகைகளும், கிருதவகைகளும், மெழுகு, சூரணம், கஷாயம், அவிழ்தம் முதலியனவும், அவைகளால் மாறும் நோய் விபரங்களும் விரிவாக எழுதப்பட்டிருக்கின்றன. இதன் விலை சதம் 50. எமக்கனுப்பிய பிரதிக்காக மேற்படி வைத்தியர்க்கு நன்றி கூறுகின்றேம்.

## ஸ்ரீமான். சிதம்பரப்பிள்ளை மயில்வாகனம்

உடுவில் வாசரும் மலாய்நாட்டிற் பிரபல உத்தியோகராயிருந்து விளங்கிப் பென்சனராக விருப்பவரும், தேசாபிமானம், பாஷாபிமானம், சமயாபிமானம் ஆதிய இலட்சணங்களிற் சிறந்தவரும் எமது பத்திரிகாபிமானியுமாகிய இவர் காத்திரமுண்டான உதாவாய்வினுற் சிலகாலம் பீடிக்கப்பட்டிருந்து, தற்போது சுன்னாகம் சுதேச வைத்தியர் திரு. சி. சிங்கமாப்பாணர் அவர்களின் வைத்திய சிகிச்சையினாலும், பெருமான் அனுக்கிரகத்தினாலும் குணமடைந்து வருகிறாரெனவறிந்து மகிழ்கின்றேம்.

## ஸ்ரீமான். சுப்பிரமணியர் முத்தையாபிள்ளை

தாவடி வாசரும், மலாய்நாட்டுப் பென்சனரும், தமிழ் அங்கிலம் என்னும் பாஷைகளில் மிகவும் தேர்ச்சியுடையவரும், சோதிடநூலுணர்ச்சி வல்லுனரும், சிவபக்தி மிக்காருமாகிய இவரை நாம் சென்றகிழமை தரிசித்தேம். இவர் நல்ல சுகசேமத்துடன் இருக்கின்றார். இவர் மனச்சுகவீனமுடையராயிருக்கின்றாரெனச் சிலர் கூறிய வார்த்தைகள் அபத்தமுடையன வென்பதை, இவரின் தரிசனத்தின்பின் நாம் கண்டேம். இவரின் நற்சுகத்திற்காகப் பெருமான் அருள்பாலிப்பாராக.

## புதிய அப்பீல்கோடுகள்

கிறிமினல் வழக்குகளில் குற்றப்பட்டவர்கள் அப்பீல் கேட்பதற்குச் சுப்பிறீம்கோடும், அதற்கு மேலாக லண்டனில் பிறிவிக் கவுன்சிலும் உண்டு. ஏழைகளானவர்கள் லண்டனுக்கு அப்பீல் கேட்க முடியாதபடியால், தைமாசம் 1-ந் திகதி தொடக்கமாக இலங்கையிலும் சுப்பிறீங் கோட்டுத் தீர்ப்புக்கு மேலான அப்பீல் கோடு ஸ்தாபிக்கப்படுமென அறிகின்றேம்.

## காலநிலை

இரண்டு மூன்று நாட்களாக நல்ல மழை வருஷித்தது. இரவிற் குளிர் அதிகமாய் இருப்பதினால் தடிமல் காய்ச்சல் முதலிய நோய்கள் அதிகரித்து வருகின்றன. களவு ஒருபுறம் நோய் ஒருபுறமாக யாழ்ப்பாண மக்களை வருத்தி வருவது வருந்தத்தக்கது.

நன்றூற்ற வுள்ளுந் தவறுண் டவரவர் பண்பறிந் தாற்றுக் கடை.

# சர்வாதிகாரிகளின் மறு ஆட்டம்

## நாடுபிடிக்கச் செய்துவரும் திட்டம்

"ஒருவரும் யுத்தத்தை விரும்பவில்லை. ஆனால், ஐரோப்பா முழுவதும் யுத்தமுனையை நோக்கி விரைந்துபோய்க்கொண்டிருக்கிறது. இரண்டொரு மாதங்களுள் வல்லரசுகளுக்கு மனமாற்றமுண்டாகவில்லையானால், அடுத்த வருட வசந்தகாலத்திற்குள் விபரீதம் நேர்ந்துவிடும். யுத்த நிகழ்ச்சிக்கு ஒருகாரணமும் தென்படவில்லை. ஆனால் மனோபாவம்தான் யுத்தத்தை நோக்கி வல்லரசுகளைத் தள்ளுகிறது" என்று ஐரோப்பா வெங்கும் சுற்றுப்பிரயாணம் செய்த தென்னாபிரிக்க பாதுகாப்பு மந்திரியாரான திரு. பிரோ அவர்கள் ஒரு அறிக்கையை வெளியிட்டிருக்கிறார். இவர் ஜேர்மன் சாதியைச் சேர்ந்தவர். அதனால் இவரது ஐரோப்பிய பிரயாணத்தையிட்டுப் பிரித்தானியிலே சிலருக்குச் சந்தேகமுண்டாயிற்று. இது சம்பந்தமாய்ச் சில கேள்விகள்தானும் பாளிமேந்திலே எழுந்தன. ஹிற்லர்--முசோலினி வர்க்கத்தாருடன் திரு. பிரோ என்ன சம்பாஷித்தார் என்பது தெரியவில்லை. பொதுவாக ஐரோப்பாவில் யுத்தமுஸ்திப்புப் பலமாக நடந்துவருகிறதென்று இவர் குறிப்பிடுகிறார். இதை எவருமே மறுக்கமாட்டார். யுத்தமுஸ்திப்பைத் தடுப்பதெப்படி? வல்லரசுகளுக்கு மனமாற்றமுண்டாக வேண்டுமாம். வல்லரசுகளின் மனோபாவம் யுத்தத்தைவருவிக்கும்போல் தோற்றுகிறதென்று இவர் கூறுவதில் அர்த்தமிருக்கிறது. எதை வேண்டுமானாலும் சாதிக்கலாம், கேட்கிறவர் ஆரென்பது சர்வாதிகாரிகளின் மனோபாவம். ஐக்கியத்துடன் ஒன்றாக நிமிர்ந்து நின்று சர்வாதிகாரிகளை எதிர்த்து ஒடுக்க வேண்டுமென்ற துணிவும் சக்தியும் சனநாயக நாடுகளுக்கு இல்லை. இந்த நிலையில் துணிந்தவர் குதிரை வருபல் இருப்பார்களோ?

* * *

சர்வாதிகார மனோபாவம் இன்னும் எந்தெந்த நாடுகளை விழுங்கத் திட்டமிட்டிருக்கிறது என்பதைக் கவனிப்போம். ஜேர்மனி ஆஸ்திரியாவையும், செக்கோவிலுள்ள சூடெற்றன் பகுதியையும் விழுங்கியதும், இத்தாலியின் மண்பசி கொஞ்சம் அதிகரிக்கத் தொடங்கியது. அபிசீனியாவை விழுங்கியதும் அதன் கோரப்பசி தணியவில்லை. பிராஞ்சினிடமிருக்கும் சில பிரதேசங்களை எப்படி விழுங்குவதென்று இப்போதே இத்தாலி திட்டமிட்டு வருகிறது. இதைக்கண்ட ஜேர்மனி, என்ன இனி பின்வாங்கலாமா? அதுவும் மண்பசியைத்தணிக்க திட்டமிடுகிறது. இழந்த குடியேற்றநாடுகளைப் பிடிப்பதற்குமுன் ருஷியாவை ஒருகைபார்த்துவிடவேண்டுமென ஜேர்மனி விரும்புகிறது. தான் ஜென்மப்பகைகொண்ட பிராஞ்சுடன் இத்தாலி கோபங்கொண்டிருக்கையில் ஜேர்மனி அதனோடு நேசஉடன்படிக்கை செய்திருக்கிறது. இது சர்வாதிகாரிகளின் இராசதந்திரமா? சென்ற மகாயுத்தத்தின்போது பிராஞ்சுதேசத்தை உருத்தெரியாமல் நொறுக்கிவிடவேண்டுமென்று ஜேர்மனி ஆசித்தது. மகா யுத்தத்திற்குப்பிறகு ஜேர்மனியைப் பாதாளத்தில் ஆழ்த்திவிட வேண்டுமெனப் பிராஞ்சு அவாவுற்றது. இரண்டு நாடுகளின் ஆசையும் கைகூடவில்லை! இத்தகைய இரு வல்லரசுகளும் உடன்பட்டுப் பரஸ்பர நன்னம்பிக்கையொன்றில் கைச்சாத்திட்டிருக்கின்றன. இந்நிகழ்ச்சி உலக சமாதானம் நிலைபெறுவதற்கு உறுதுணையாக இருக்குமென்று ஒருசாரார் அபிப்பிராயப்படுகிறார்கள். பிராஞ்சுக்கும் ஜேர்மனிக்குமிடையில் எல்லைப்புறத் தகராறு எதுவுமில்லையாம். சகோதர பான்மையில் அயல் வீட்டுக்காரர்போல் இருப்பார்களாம். விவகாரம் ஏதும் உண்டானால் சமரசமாகப்பேசி முடிவுசெய்து கொள்வார்களாம். இதுதான் பிராஞ்சிய—ஜேர்மன் உடன்படிக்கையின் சாரம்.

* * *

சமீபகாலத்திலே வல்லரசுகள் பரஸ்பரம் செய்துகொண்ட நேச உடன்படிக்கைகளுக்குக் கணக்கு வழக்குக் கிடையாது. லொக்கார்னோ உடன்படிக்கையை ஞாபகப்படுத்திக் கொண்டாலே போதும். அவ்வுடன்படிக்கையின் கதி யாதாயிற்று? ஜேர்மனிதான் லோக்கார்னோ உடன்படிக்கையைக் குழிதோண்டிப் புதைத்தது. இதே சந்தேகம் இப்போதும் புதிய உடன்படிக்கையைப்பற்றிச் சில பத்திரிகைகளுக்கு ஏற்பட்டிருக்கிறது. 'எந்த உடன்படிக்கையைத்தான் சந்தர்ப்பம் கிடைக்கும்போது மீறமுடியாது? ஜேர்மனி இத்தாலியின் இணைபிரியாத தோழனல்லவா?', என்று பிராஞ்சிய பத்திரிகைகள் வினவுகின்றன. தென்னாபிரிக்காவின் பாதுகாப்பு மந்திரியாரான திரு. பிரோ சொன்னவாறு மனம் கோணலாயிருக்கும்போது செய்த காரியம் கோணலின்றி நேர்மையாயிருக்க முடியுமா? என்ன காரணமாக இவ்வுடன்படிக்கை செய்யப்பட்டிருக்கிறதென்று அகில உலகமும் நினைத்துக்கொண்டிருக்கையில் ஜேர்மனி எப்படி ருஷியாவைச் சிதைக்கலாமென்று இரகசியமாகத் திட்டமிட்டுவருகிறது. செக்கோவைச் சமீபத்திலே ஜேர்மனி சிதைத்ததல்லவா? அந்தச் செக்கோவின் ஒரு பகுதிதான் ருத்தேனியா. இது செக்கோவில் அடங்கியதான பூரண பொறுப்பாட்சியுடன் கூடிய ஒரு மாகாணமாய் இருந்து வருகிறது. நெருக்கடியின்போது தலையிட்ட இத்தாலிய—ஜேர்மன் மத்தியஸ்தர்கள் இந்த மாகாணப் பொறுப்பாட்சிப் பிரதேசம் முன்போல் அப்படியே இருக்கட்டுமெனக் கூறிவிட்டார்கள். அத்தகைய மாகாண சுயாட்சிப் பிரதேசம் இன்னும் எத்தனை நாள்வரை இந்தச் சுதந்தரத்துடனிருக்கும்? போலந்துதேச ஐக்கிய கொள்கைப் பத்திரிகை ஒன்று. 'புதிய நெருக்கடிகளுக்கு இந்தப் பிரதேசம் ஆஸ்பதமாக இருக்கிறது' எனக் கூறுகிறது.

* * *

உக்ரைன் பிரதேசமான ருத்தேனியாவுக்கு மேலே இருக்கிறது. அது இப்போது சோவியற் ருஷியாவின் ஒரு பகுதியாக இருந்து வருகிறது. இப்போது அங்கும், ருத்தேனியாவிலும் ஒரே மாதிரியான கிளர்ச்சி நடந்துவருகிறது. உக்ரைன் பிரதேசம் அனைத்தும் ஒன்றுசேர்ந்து தனி வல்லரசாக அமையவேண்டுமென்ற உணர்ச்சி அங்கே நாளுக்குநாள் பலம்பெற்று வருகிறது. இந்தப் பிரதேசம் இப்போது நூற்றுக்கு 75 வீதம் ருஷியாவின் ஆட்சியிலும், மிகுதி செக்கோவிடமும், போலந்திடமும் இருக்கிறது. இது எல்லாம் ஒன்றுசேர்ந்து தனி வல்லரசாக அமையும்போது ருஷியாவின் உக்ரைன் பிடி மறைந்துவிடும். போலந்தும் கொஞ்சத் தேசத்தை விட்டுக்கொடுக்கவேண்டிவரும். இந்தச் சமயத்தில் ஜேர்மனி என்ன திட்டமிடுகிறது தெரியுமா? ஹங்கேரி—போலாந்து எல்லையைத் தனக்குச் சாதகமாக உக்ரைன்வரை நீட்டிவிட்டால் அப்படியே உக்ரைனை விழுங்கிவிடலாமென ஹிற்லர் எண்ணுகிறார். அவரது இந்தக் கனவு நனவானால் ருஷியாவின் பலம் பெரிதும் குறைந்துவிடும். ருத்தேனியாவில் ஜேர்மனிக்கு ஆதிக்கம் ஏற்பட்டுவிட்டால் அது உடனே ருமேனியாவின் கொட்டத்தை அடக்க முயற்சிக்கும். போலந்தும் ஹங்கேரியும் தனக்குப் பணிவதுபோல் ருஷியாவும் தனக்குத் தலைசாய்க்க வேண்டுமென ஹிற்லர் எதிர்பார்க்கிறார். ருமேனியாவில் ஜேர்மனி கண்போடுவதற்கு மற்றொரு காரணமுண்டு. அதன் எண்ணெய் ஜேர்மனிக்கு அத்தியாவசியகமாகும். ருஷியாவிடமிருந்து உக்ரைன் பிரிந்துவிட்டால் அப்படியே அதை அமுக்கி ஜேர்மனியின் கீழ் உள்ள ஒரு நாடாக்க ஹிற்லர் நினைக்கிறார். ஆஸ்திரியா, சூடெற்றன், உக்ரைன் ஆகிய நாடுகள் ஜேர்மனியுடன் சேர்ந்து விட்டால் அது ஐரோப்பாவில் பெரிய வல்லரசாகிவிடுமல்லவா?

ச—பா.

# தைப்பொங்கல்

K. C. T.

மாரிகாலம் முழுவதும் குளிராலும் மழையாலும் வருந்திக்கொண்டு ஆதவனைக் காணாத மக்கள் தைபிறந்ததும் சூரியனுக்குப் பாற்பொங்கல் பொங்கி வழிபட்டு மகிழ்வர். இந்த வழக்கம் நாட்டிடையே தொன்றுதொட்டு வந்தவழக்கமாகவிருக்கின்றது. சூரியனே கண்கண்ட தெய்வமாகவிருந்து, மழையைப் பெய்வித்து மக்களுக்கு நலம் செய்பவன் ஆதலால், அச்சூரியனை வழிபடுதல் ஏற்புடைத்தாகின்றது. உலகவாழ்விற்கு இன்றியமையாதது மழை. அதிலும் கிருஷிகத்தொழிலை மேற்கொண்டு வாழ்வோர்க்கு மழை இன்றியமையாது வேண்டற்படுவதொன்றாகும். அதிலும் ஆற்றுவளம் இல்லாத நமது யாழ்ப்பாணநாடு மழையொன்றையே நெல் வேளாண்மைக்கு எதிர்பார்க்கின்றது. வானம்பார்த்த பூமியென நமது நாடு வளங்கப்படுவதும் உண்மையேயாகும். இத்தியாதி பல காரணங்களால் தைப்பொங்கல் தினத்தன்று சூரியவழிபாடுசெய்தல் பொருத்தமானதே. இத்தைப்பொங்கற்றினத்தன்று யாவரும் அதிகாலையில் நித்திரைவிட்டெழுந்து அவசிய கருமம் முடித்து ஸ்நானம்செய்து தூயவஸ்திரம் தரித்து தமது இஷ்டதேவதையைத் தியானித்துக் கொண்டு ஆலயவழிபாடு செய்தல் உத்தமமாகும். இத்தினத்திற் பெண்கள் திரிகரணசுத்தியோடும் வீட்டுமுன்றிலிற் சாணத்தால்மெழுகிக் கோலமிட்டு ஆதவற்குப் பொங்கல் செய்து வழிபடுதல் சிறந்ததொன்றாகும்.

இத் தைப்பொங்கற்றினத்தையொட்டிச் சில விஷயங்கள் நம்மவருக்கு நாம் சொல்லவேண்டியிருக்கின்றன. இத் தைப்பொங்கற்றினத்தன்று சிறுவர்கள் யாவரும் பட்டாசு கொளுத்துகிறார்களல்லவா? இந்தப் பட்டாசெல்லாம் சீனா யப்பான் முதலிய அன்னியநாட்டுப் பொருட்களல்லவா? இந்த அன்னியநாட்டுப் பொருள்களாகிய பட்டாசு வெடிகளுக்கு எவ்வளவு காசு செலவாகின்றதென்பதை நம்மவர் சிறிது யோசிக்கவேண்டும். சில காரியங்களை நாங்கள் மிக அற்பமென்று நினைத்துச் சும்மாவிருக்கின்றோம். ஆனால் அந்த அற்பமென்று நம்மால் கருதப்படுகின்ற விஷயங்களே நாளடைவில் நமது நாட்டின் செல்விருத்தியைச் சுரண்டிக்கொண்டு போகின்றனவென்று நம்மவர் கவனத்தில் எடுத்துக்கொள்கிறதில்லை. அல்லது அத்தகையவோர் ஸ்தாபனத்தை நமது நாட்டில் நிறுவுவதற்குத்தானும் நம்மவர் கருதுவதில்லை. கூடியவரை அன்னியநாட்டுப் பட்டாசு வெடிகளைப் பகிஷ்கரிப்பதே சாலவும் சிறந்ததாகும்.

கட்பொறிக்குவிடமாகும் இந்தச் சூரியனை வழிபடுவதுபோல ஞானசூரியனையும் நாம் போற்றுதல் வேண்டும். கலைவிருத்தி நமது நாட்டிற் குறைந்துகொண்டே வருகின்றது. ஞானசூரியனுக்குப் பொங்கலிட்டு அஞ்ஞானமான இருளைநீக்குதல் வேண்டும். மனத்தின்கண் பகை பொறாமை முதலிய தீயகுணங்களையகற்றுதல் வேண்டும். மது அரக்கனை மாய்க்கவேண்டும். நமது வாழ்வையே தேசியவாழ்வாக்க வேண்டும். இன்றேல் பொங்கல்போன்ற எத்தனை பண்டிகைகளை நாம் கொண்டாடினாலும் பிரயோசனம் யாதும் எய்தப்போவதில்லையாகும்.

பொங்கல் கொண்டாட்டத்தோடு கள்வரின் திண்டாட்டமும் நீங்குமென்று எதிர்பார்க்கப்படுகின்றது. இளவாலைக் கொலைவிஷயமும் மெல்ல மெல்ல வெளிப்படுகின்றது என்பது அறிந்து மகிழ்கின்றோம். இக் கொலைவிஷயம் கண்டுபிடிக்கப்பட்டு ருசுப்படுத்தப்படுமாயின் கள்வர் ஏற்றதண்டனை பெறுவரென்பது திண்ணம். பிடித்து விளக்கமறியலில் வைக்கப்பட்டிருக்கும் கள்வரைக் கோட்டிற் கொண்டுவரும் நாட்களிலே பல்லாயிரம் பெருந்திரளான சனங்கள் குழுமிக் கொண்டிருப்பதிலிருந்து நாட்டிலே கள்வரைப்பற்றிய துவேஷம் எவ்வளவு கடுமையாகவிருக்கின்றதென்பது தெரியவருகின்றது. கள்வர்க்காகப் பரிந்துபேச முன்வந்த அட்வக்கேற் ஒருவருக்குக் காயம் வைத்தார்களென்பதுகேட்டு மனம் வருந்துகின்றோம். நாட்டு மக்கள் அவ்வளவு கடுமையாகப் போகக்கூடாது. எனினும் பொங்கல் மகிழ்ச்சியோடு கொலைக்குற்றமும் வெளிப்பட்டுவிட்டதே என்ற மகிழ்ச்சியும் ஒன்றுசேர்ந்து ஆநந்தம்பொங்கச்செய்துவிட்டன. கொலைவிஷயத்தை மேலும் மேலும் விசாரித்து உண்மையைக் காண்பார்களாக. நாட்டுமக்களின் வந்தனம் கண்டுபிடிப்போருக்கு உரியதாகுக.

பொங்கும்மங்களம்எங்கும்தங்குக.

# விதியின் வலிமை

நள்ளிரவு. கீழ்வங்காளத்தில் ஒரு சிறிய குடிசையில் மங்கலான ஒருவிளக்கு எரிந்துகொண்டிருந்தது. குடிசையிலிருந்தவர்கள் ஓர் இளம் அந்தணனும் அவன் வாழ்க்கைத் துணையுமாவர். அவர்கள் ஒருவரையொருவர் கட்டித்தழுவியபடி ஆழ்ந்த நித்திரையில் அமிழ்ந்திக்கிடந்தனர். திடீரென அந்த இளம் அந்தணன் எழுந்து கூரையிலிருந்து ஒரு புல் நிலத்தில் விழுவதைக் கண்டான். கண்மூடி முழிப்பதற்கிடையில் அப்புல் ஒரு நாகபாம்பாக மாறிற்று. மாறி நித்திரையாய்க்கிடந்த அவனது மனைவியைத் தீண்டிற்று. அவள் ஐயோ என்று குழறி அலறி மோதி மடிந்தாள். இந்தச் சம்பவத்தைக் கண்ட அந்தணனது வியப்போ அளப்பரிதாயிற்று. மனைவியின் ஈமக்கிரியைகளைச் சுற்றத்தவரே செய்யவிட்டு, அக்குடிசையிலிருந்து உடனே புறப்பட்டு நாகத்தை அவன் பின்தொடர்ந்தான். அது சிறிதுதூரம் ஊர்ந்துசென்றபின், திடீரென ஒரு நரியாக மாறிற்று. மாறி ஒரு வீட்டிலிருந்து அப்போதுதான் வெளியே வந்த ஒருபையனைக் கடித்துக்கொன்றது. அதன்பின் அந்நரி மற்றொரு கிராமத்துள் நுழைந்து ஒரு விசர்நாயாக மாறிற்று. மாறி வழியிற் போய்க்கொண்டிருந்த இருவரைக் கடித்தது. அந்தணனே இந்த அதிசய பிராணியைப் பின்தொடர்ந்து போனான். அதற்குத் தெரியாமலே அதன் செயல்களையெல்லாம் அவதானித்துக்கொண்டு சென்றான். கடைசிவரை அதன்செயல்களைப் பார்க்கவேண்டுமென்ற வேட்கை அவனுக்கதிகரித்தது.

காலைநேரமாயிற்று. கிழக்குவெளுத்தது. இதுவரை ஆழ்ந்த நித்திரையிலமிழ்ந்திக்கிடந்த இயற்கை முழுவதும் புத்துணர்ச்சிபெற்று விழித்ததுபோன்றிருந்தது. விசர்நாயும் தன் உருவத்தை மாற்றிக்கொண்டது; ஓர் எருமையாயிற்று. இன்னுஞ் சிலரது உயிரை வாங்கிற்று. இது முடிந்ததும் அது பெரியதெருவழியாகப் போயிற்று. சிலமைல்தூரம் சென்றபின், பதினாறுட்டைப் பிராயத்தளாகிய ஓர் அழகிய இளமங்கையாகவே வேற்றுருக்கொண்டது. ஒரு மரநிழலின்கீழ் அம்மங்கைபோய் உட்கார்ந்தாள். அச்சமயத்து ராஜபுத்திரச் சகோதரர் இருவர் அவ்வழியே வந்தனர். அவர்கள் இந்த இளநங்கையைக் கண்டதும், அவளது அழகிற் சொக்கினர். இருவரும் அவளுக்கருகாமையிற் சென்றனர், அவர்களில் மூத்தவன் அவள் யார் என்றும் எங்குள்ளவள் என்றும் ஏன், அங்கு வந்தனள்என்றும் விசாரித்தான். இவ்வினாக்களுக்குப் பதில் கூறுவதற்குமுன்னரே அம்மங்கை தனக்குத் தாகவிடாய் அதிகரித்திருக்கின்றதென்றும், தண்ணீர் கிடையாவிடின் தான் இறந்துபட நேரிடுமென்றும் கூறினாள். மூத்த சகோதரன் தன் தம்பியிடம் அவளைப் பார்த்துக்கொள்ளும்படி பணித்துத் தன் லோட்டாவையும் எடுத்துக்கொண்டு தண்ணீர் மொண்டுவருவதற்காகக் கிணற்றண்டை விரைவாகச் சென்றான். சிலநிமிஷ நேரங்களில் அவன் நீருங்கொண்டு அவ்விடம் திரும்பினான். அம்மங்கையோ கூந்தல்குலைய மாரடித்து ஒப்பாரிசொல்லி அழுவதைக்கண்டு வியப்புற்றான். மேலும் அவள் மூத்தவனை நோக்கி, "நீர் போனபின்னர் உமது தம்பி என்னைப் பலாத்காரஞ்செய்ய எத்தனித்தான். நான் எவ்வளவோ முயன்று தப்பிக்கொண்டேன். தகுந்த சமையத்தில் நீர் வந்திராவிடின் நான் என் மானத்தை இழந்திருப்பேன்" என்று அழுதழுது கூறினாள். மூத்தவனது கோபம் எல்லைகடந்தது. அவன் லோட்டாவைச் சுழற்றி வீசினான். மின்னெனத் தன் உறையிலிருந்த வாளை உருவினான். தன் தமையன் பொய்யான வார்த்தைகளை நம்பித் தன்மீது சீற்றங்கொள்கின்றானென்று தம்பிக்குத் தெரிந்தது. தெரிந்தபோதும் அவன் அதைப்பற்றித் தமையனுக்கு விளக்குதற்குப் பொறுக்கவில்லை. ஏனெனில், இராஜபுத்திர மக்கள் எவரேனும் தம்மை எதிரியாயம்பற்றியேனும் போருக்கு அறைகூவியழைத்தால் அவரை எதிர்ப்பதற்குப் பின்வாங்குதல் பேடித்தனம் என்று கருதும் வழக்கமுடையர். ஆகவே, தம்பிக்கும் தமயனுக்குமிடையே ஒரு வாட்போர் நடந்தது. இருவரும் கைதேர்ந்த வாட்போர் வீரர்கள். இருவர் வாள்களும் ஒன்றோடொன்று நெருப்பெழ உரோஞ்சின. அது மிக உக்கிரமான போராயிற்று. கொல்வது அல்லது இறப்பது என்பதே அவர்கள் தீர்மானமாயிற்று. அரைமணி நேரமாகப் போர் நடைபெற்றது. அதில் இரு சகோதரர்களும் பெருங்காயமுற்று இரத்தஞ்சிந்தி மயங்கிவிழுந்து அந்த மங்கையின் பாதத்திலேயே உயிரிழந்தனர்.

இதுவரை தன் உதட்டுக்குட் புன்னகைகோட்டிநின்ற மங்கைநல்லாள் எழுந்து ஒரு கானகம் நோக்கி ஏகினள். நடுக்காட்டை அடைந்ததும் ஒரு கிழப் பிராமணனாக மாறினாள். இதுவரை மௌனமாகவே இந்தநூதன பிறவியின் செயல்களை அவதானித்துக் கொண்டு பின்தொடர்ந்த அந்தண இளைஞன் அந்தக் கிழப்பிராமணனின் முன்னால் வந்து "நீர் யார்? நீர் என்ன?" என்று கேட்டான். கிழப்பிராமணனோ அதற்கு யாதும் பதில் கூறாது இளப்பிராமணனை மெல்லவிட்டு நழுவமுயன்றான்.

ஆயின், பிராமண இளைஞனோ மிக விரைவாக அவனைத்தொடர்ந்து முன்னாற் சென்று மறித்தான். அவர்களுக்கிடையே பின்வரும் சம்பாஷணை நடைபெற்றது:—

இளப்பிராமணன்:— ஆரம்பத்திலிருந்தே நான் உமது செயல்களை அவதானித்து வந்தேன். நீர் யார்? ஏன் இந்தக் கொடிய செயல்களைச் செய்தீர் என்று எனக்குத் தயைகூர்ந்து தெரிவித்தல்வேண்டும்.

கிழப்பிராமணன்:— என்னைத் தொந்தரவு செய்யாதே. போய்விடு. இன்றேல் உனக்கு அபாயம் நேரிடுதல் நிச்சயம்.

இ-பி:— நான் என் உயிரைப் பொருட்படுத்தியிருப்பேனாயின், இந்தத் தனித்த கானகம்வரை உம்மைத் தொடர்ந்திருக்கமாட்டேன் இறப்பதற்கு நான் அஞ்சவில்லை. நான் அறியவிருப்புவதை எனக்குத் தெரிவிப்பீராக. இன்றேல், உமது முன்னிலையிலேயே நான் தற்கொலை செய்துகொள்வேன். எனது மரணத்திற்கு நீரே காரணமாவீர்.

கி-பி;— நான் எமதர்மராஜனது தூதன். என் எஜமானனது கட்டளையைப் பூர்த்தியாக்குவதற்காகவே இவ்வாறெல்லாஞ் செய்தேன். நீ அவற்றைக் கண்டாய். சாதாரணமாகச் சில விஷயங்களைச் செய்வதிற் கஷ்டம் ஏற்படின், அவற்றை நிறைவேற்றுவதற்கு எமதூதர்களாகிய நாம் வருகின்றோம். வந்து அவற்றைப் பூர்த்திசெய்கின்றோம். இனி நீ மனவமைதியோடு போகுதி. என்னைத் தொந்தரவு செய்யாதே.

இ-பி:— இன்னும் ஒருவார்த்தை. அதனோடு என் அலுவலை முடித்துக் கொள்கின்றேன். நான் எப்படி எப்போது எங்கே என் உயிரை இழப்பேன் என்று எனக்குச் சொல்லியருளுதல் வேண்டும்.

கி-பி:— அஃது என்னாற் சொல்லமுடியாது. போகுதி.

இ-பி:— நான் அறிய விரும்புவதை நீர் எனக்குச் சொன்னாலன்றி நான் போகேன்.

மேலும் இந்தப் பிடிவாதகுணம் வாய்ந்த இளைஞனோடு சம்பாஷணை வைத்துக்கோடல் தக்கதல்ல என்று கருதிய யமதூதன் "உன் ஐம்பதாவது வயதில் பகீரதி என்னும் ஆற்றில் ஒரு பெரிய முதலையால் நீ விழுங்கப்படுவாய்" என்று கூறித் திடீரென மறைந்தான்.

அந்தண இளைஞன் இந்தத் துக்ககரமான முடிவு தனக்குண்டாகப் போகின்றதே என்று அறிந்தது பெரிதும் பயந்தான். எனினும், அதினின்றும் தப்பிக்கொள்ள விரும்பித் தன் வீட்டுக்கே திரும்புவதில்லையென்று தீர்மானித்துக் கொண்டு பகீரதி ஆற்றின் பேரே தெரிந்தவர் மிகச்சிலரே வசிக்கும் ஓர் இடத்தையடைந்தான். இங்கு அவன் பிள்ளையில்லாத ஒரு பெரிய தனவந்தன் வீட்டில் வசித்துவந்தான். அவ்வீட்டில் இந்த இளம் பிராமணன் வந்து சேர்ந்தபின், தனவானின் மனைவி ஓர் ஆண்மகவை ஈன்றெடுத்தாள். ஆகவே, அந்தணன் அங்குவந்து சேர்ந்தமை அவ்வீட்டாரால் ஓர் அதிர்ஷ்டமாகவும் சுபசகுனமாகவும் கருதப்பட்டது. தனவந்தனும் அவன் மனைவியும் அந்த அந்தணனை மேலும் மேலும் நேசித்தனர். சில ஆண்டுகள் கழிந்தன. சிறுவனும் வளர்ந்தான். அவனுக்குக் கல்வி கற்பிக்கும் வேலை அந்தணனிடம் விடப்பட்டது. சிறிதுகாலத்திற் கிடையிலேயே சிறுவன் தன் ஆசான்மீது அளவுகடந்த பற்றுடையவனானான்.

ஒருவருஷம் பகீரதிநதியின் தீர்த்தத்தில் ஆடுதற்குரிய ஒரு சிறந்த புண்ணிய தினம் ஏற்பட்டது. இப்புண்ணிய தினத்தில் தீர்த்தமாடுவோர் இப்பிறவியிலும் முற் பிறவிகளிலும் செய்த பாவங்களெல்லாம் நீங்கப் பெறுவர் என்பது நம்பிக்கை. ஆகவே, இத்தினத்தில் பகீரதி தீர்த்தத்தில் தானும் தன் மனைவியும் மகனுமாக ஸ்நானஞ் செய்ய வேண்டுமென்று தனவந்தன் தீர்மானித்தான். அதற்குரிய ஆயத்தங்களெல்லாம் செய்யப்பட்டன. தனவந்தன் அந்தணனையுந் தங்களோடு வரும்படி வேண்டினான். ஆயின் அந்தணனோ அதற்கு இணங்கவில்லை அந்தணன் தங்களோடு உடன் வாவில்லை என்றதை அறிந்த சிறுவனும் தீர்த்தமாடத் தான் போவதில்லை என மறுத்தான். மகனை அழைத்துச் செல்லாமல் தான் போவதில்லை என்று தாய்மறுத்தாள் தனவந்தனுக்கு என்னசெய்வதென்று தெரியவில்லை. இப்போது ஆசிரியர் அந்தக் குடும்பத்தோடு தீர்த்தமாடப் போகவேண்டும். இன்றேல், அக்குடும்பத்தார் மிக அருமையாகக் கிடைக்கும் அப் புண்ணியதினத்தில் தீர்த்தமாடும் பாக்கியத்தை இழப்பர். ஆகவே, மிக வருந்திக் கேட்டபோது, தான் ஆசிரியர் யமதூதன்வாயிலாக அறிந்தது முழுவதையும் ஒன்றுமொளியாமற்—சொல்லித் தான் பகீரதிநதியில் தீர்த்தமாட விரும்பாமைக்கும் காரணம் அதுவாகும் என்பதையும் தன்னைப் போஷித்துவந்த தனவந்தனுக்கு எடுத்துரைத்தான். தனவந்தனோ "இஃதெல்லாம் உண்மையில் நடக்கிற காரியமா? என்று எடுத்து நியாயங்காட்டினான். பின் அஃது எவ்வாறிருப்பினும், தங்களுக்கு எத்தகைய அபாயமும் நேராதென்றும், ஏனெனில், அந்நதியில் தாம் தீர்த்தமாடும் இடம், இரும்புக்கம்பி வேலியால் அடைக்கப்பட்டு, அதற்குள் நின்று ஸ்நானஞ் செய்வோரை ஆறு இழுக்கமுடியாத விதமாகப் பாதுகாக்கப்பட்டிருக்கின்றதென்றும், ஆதலால் அஞ்சவேண்டியதில்லை யென்றும் கூறி, அந்தணனைத் தங்களோடு வருமாறு வேண்டிக்கொண்டான். ஆசிரியர் தனவந்தனது வேண்டுகோளை மறுக்கமுடியாமையினால், மனமில்லாமலே அவர்களோடு சென்றார் சொல்லப்பட்ட புண்ணிய முகூர்த்தத்தில் அவர்கள் பகீரதி தீர்த்தக் கரையை அடைந்தனர். குடும்பத்தினர் தமது காலைக்கடன்களைச் செய்தனர். ஆசிரியர் நதியை அடைந்து அதில் மூழ்கினார். மூழ்கினதுதான் தாமதம். அவரது மாணவன் ஆற்றிற் குதித்துத் திடீரென ஒரு பெரிய முதலையாக மாறி, அந்தணனது கழுத்தை இறுகப் பற்றிக்கொண்டு, "ஓ பிராமணா! உன் வேண்டுகோளுக்கிசைந்து பலஹீனமான ஓர் அவசரத்தில் யான் இரகசியத்தைச் சொல்லித்தந்தபடியால், நீ எனக்குப் பெரிய தொந்தரவை அளித்துவிட்டாய். எனினுமென்? விதியை மனிதன் வெல்லமாட்டுவானல்லன்" என்பதை இப்போதாயினும் அறிகுதி" என்று கூறி மறைந்தான்.

## திரு. A. S. V. ஆசைப்பிள்ளை அவர்களின் தேதியட்டவணை

புளத்கோகுப்பிட்டியாவில் பிரபல வர்த்தகராயிருக்கும் திரு. A. S. V. ஆசைப்பிள்ளை அவர்களிடமிருந்து 1939-ம் ஆண்டுக்குரிய தேதியட்டவணை ஒன்று வரப்பெற்றோம். மேற்படியாருக்கு அலவாத்துறை என்னுமிடத்திலும் கிளை வர்த்தகசாலையொன்று இருக்கின்றன. இக்கடைகளில் அன்னியதேசக் குடிவகைகளும், மருந்துச்சரக்கு வகைகளும், பலவித எண்ணெய் வகைகளும், இன்னும் சகலவிதமான சாய்ப்பு--சரக்குச்சாமான்களும் மிகவும் மலிந்தவிலைக்குப் பெற்றுக்கொள்ளலாம். எமக்கனுப்பிய தேதியட்டவணைக்காக மேற்படி வர்த்தகர் அவர்களுக்கு எம் மனமுவந்த நன்றியைத் தெரிவிக்கின்றோம்.

## கொழும்புக்கு பார்ஸி பெண் பாரிஸ்றர் விஷயம்

செல்வி அவாபாய் மேத்தா என்னும் யவ்வன பெண் நியாயவாதி சமீபத்திற் கொழும்பு வந்து சேர்வாரென அறிகின்றோம்.

இவர் தமது 19-ம் வயதில் "பாரிஸ்றர்" பரீக்ஷையிற் சித்தியடைந்தவர். இதுவரை லண்டன் "பிறிவிக் கவுன்ஸிலில்" தொழில் நடத்தியவர். இனிமேல் கொழும்பில் தம் தொழிலை நடத்துவராம்.

டிசம்பர் 9-ந் திகதி தமது பெற்றாரோடு லண்டனிலிருந்து கப்பலேறினாரென்றும், வழியில் ஒரு மாசம்வரை பம்பாயில் தங்குவாரென்றும் அறிகின்றோம்.

# சீவகாருண்ணியம்

"எந்தையே! எந்தையே! என்றேத்து மெய்யடியார்
சிந்தை குடிகொண்ட தெய்வமே — முந்துங்
கருணைத் திருஉருவே! கண்ணிறைந்த இன்பே!
தருணமிஃ தாளாய்நீ தான்."

எம்மவருட் பலர் சீவகாருண்ணிய மென்றாற் புலாலுண்ணாமையைத் தான் கருதுகின்றதென விளங்கிக் கொள்ளுகின்றார்கள். புலாலுண்ணல் பூதவுடம்புடன் சம்பந்தப்பட்டது. புலாலுண்ணாமையிலும் விடக் கொலை மறுத்தல் மேம்பட்டது. கொலைமறுத்தல் புண்ணியவழி. புலாலுண்ணல் பஞ்சமா பாதகங்களிலொன்றாகக் கூறப்படவில்லை. ஆனால், பஞ்சமாபாதகங்களின் தலைப்பிற் கொலை கூறப்பட்டிருக்கின்றது. அப்படியிருந்தும் கொலை மறுத்தலுக்குப் புலாலுண்ணாமை முக்கிய சாதனமாயுள்ளதென்பதற் கையமில்லை. கொலை மறுத்தலிலும் எவ்வளவோ பங்கு விசேஷம் பொருந்தியதுயாதெனில்

### சீவகாருண்ணியம்

சீவகாருண்ணிய மென்றால், மனம் வாக்குக் காயம் மூன்றாலும் எல்லாச் சீவன்களையும் போற்றுவதேயாம். வாக்கினால் மாத்திரம் உயிர்களின் மீது கருணை காட்டுவது சீவகாருண்ணிய மாகாது. செய்கையினால் மட்டும் சீவன்களில் அன்பு காட்டுவதும் சீவகாருண்ணியமாகாது. சிந்தனையிற்றானும் ஒரு சீவனுக்கும் பொல்லாங்கு நினையாமலிருப்பதே சீவகாருண்ணியத்தின் அடிப்படையான இலட்சியம். கழகங்களின் ஆதரவின்கீழ் மேடையேறிச் சீவகாருண்ணியம் எனும் பொருள் பற்றி நீடித்த சொற்பொழிவுகள் இலேசாக நடாத்தலாம். வெறும் பேச்சிலொன்றுமில்லை. பேசிலும் பார்க்கச் செய்து காட்டுவது விசேஷம். செய்து காட்டுவதிலும் விசேஷம் ஒரு நல்ல நினைவு. உயிர்களுக்குப் பொல்லாங்கு நினையாமல் விடில் அதுவே போதுமெனச் சிலர் நினைக்கக் கூடும். ஆனால் ஒரு சீவனுக்கும் தீங்கு நினையாமல் விடுவது மல்லாமல், எல்லாச் சீவன்களையும் நோக்கி நற்சிந்தனைகளைச் செலுத்துவதே சீவகாருண்ணியம். சீவகாருண்ணியத்திற்குத் தியாகம் வேண்டும். அஃதாவது தன்னை மறுத்தேனும் ஒறுத்தேனும் அல்லது தன்னை மறந்தேனும் பிறவுயிரிடத்தே கருணை நோக்கங் கொள்ளவேண்டும். அந் நோக்கமானது பரிவுடனில்லாது புரிதலில் முடிய வேண்டும். "தன்னைப் போலப் பிறனை நேசி" எனும் வாக்கியந்தானும் ஒரு மட்டாகத்தான் சீவகாருண்ணியத்தைத் தழுவுகின்றது. உண்மையான சீவகாருண்ணியத்தில், தானென்றும் பிறனென்றும் வித்தியாசங் காணவிடமில்லை. சீவகாருண்ணிய மார்க்கத்தில் நான் எனுஞ் சொல்லுக்கிடமே கிடையாது. எச்சமயத்திலும் நீ எனும் வாக்கியத்தையே மனத்தில் உதிக்கும்படி செய்யும். உலகின் கண்

### எல்லாவுயிருமொன்று

சர்வ வுயிர்களுக்கும் உற்பத்தி ஒன்றேயுளது. எல்லாச் சீவன்களும் சிவத்திலே தோன்றிச் சிவத்திலே ஒடுங்குகின்றன. உற்பத்தியிலும் முடிவிலும் ஒன்றாகவேயிருக்கின்றன. இடையில் வித்தியாசப் படுகின்றனவோவென வாராய்ந்து பார்க்கின் அப்படி ஒரு வித்தியாசத்தையுங் காணேம். உயிர்களெல்லாம் ஒரேவித போக்கும் நோக்கும் தாக்குமுடையனவைகளாகக் காணப்படுகின்றன. எம்முயிர் போலவே எவ்வுயிருங் காணப்படுகின்றது. எம்முயிரைப் பேணல் அவசியமானால் எவ்வுயிரையும் பேணுவதும் அவசியங்காண்.

"எவ்வுயிருந் தன்னுயிர்போலெண்ணுந் தபோதனர்கள் செவ்வறிவை நாடிமிகச் சிந்தைவைப்பதெந்நாளோ" எல்லாவித தவத்திலும் மிக மேன்மை பொருந்தியது சீவகாருண்ணியம் பொருந்திய வாழ்க்கை. சீவகாருண்ணிய மில்லாதவன் சிவத்தை யொருபோது மடையமாட்டான். சீவனே சிவன். சீவனைப் போற்றாதவன் சிவனையும் போற்றாதவன். விருப்பு வெறுப்பு இரண்டையுந் தள்ளி நடப்பவனாயிருந்தாலும் ஒரு மெய்ச்சிவ பக்தனானவன் அன்பின் வலையிற் சிக்கியே கொள்வான் அன்புஞ் சிவமும் இரண்டல்ல. அன்பே சிவம். அச்சிவ அன்பு எல்லாச் சீவன்களுள்ளும் உயிருக்குயிராகி என்றுஞ் சுரந்துகொண்டேயிருக்கின்றது. எல்லாவுயிரும் அன்பிலே பிறந்து அன்பிலே வளர்ந்து அன்பிலே மடிகின்றன. அன்பின் அளவால் ஏற்றத் தாழ்வைக் காணமுடியாது. அன்பின் சந்நிதானத்தில் ஓரறிவுயிருஞ் சரிதான் ஐயறிவுயிருஞ் சரிதான். உயிரென்றால் எல்லாமொன்று. உயிரே தெய்வம் உயிரை வணங்குகிறவன் தெய்வத்தை வணங்குகின்றான். சீவகாருண்ணியம்

### தெய்வத்தன்மை பொருந்தியது

கடவுளோ கருணா நிதி. அவர் சீவன்களிற் சதா கருணையுள்ளவர். ஒருவனுடைய உள்ளத்திற் கருணை யுதிக்கும்பொழுது தெய்வமே அவ்வுள்ளத்தினுள்ளே நின்று அவனை ஏவி விடுகின்றது. இதை யுணர்த்தியே தாயுமானசுவாமிகளும்

"எவ்வுயிரு மென்னுயிர்போலெண்ணி யிரங்கவுநின் றெய்வ வருட்கருணை செய்யாய் பராபரமே" எனப் பாடினார். தெய்வத்தினிடத்தே விசுவாச மில்லாதவன் உயிர்களிடத்தே விசுவாசமாக நடக்க ஏவப்படமாட்டான். தெய்வவருள் வேண்டும். ஒவ்வொரு மனிதனும் தெய்வத்தினிடத்தே அதன் நோக்கைப் பூர்த்திசெய்யுஞ் சாதனமாகத் தன்னை யொப்படைக்க வேண்டும். ஓருயிர் வருந்துமிடத்தில் ஒரு பக்தன் தற்செயலாக வருவானேயாகில் அவ்வுயிருக்கு உதவி புரியவேண்டியிருப்பதாலேயே தெய்வந் தன்னை அவ்விடத்தே கொண்டு போய் விட்டிருக்கிறதெனும் உணர்ச்சி தன்னை யறியாமலே அவனுக்குண்டுபடும். எனவே, சுயேச்சையாகவே தன்னாலான வுதவி புரிய முன்வருவான். அவ்வித சீவதொண்டு உள்ளபடி சிவதொண்டு. சிவதொண்டின் படியில் சமயம், சாதி, குலம், செல்வம், வறுமை, உயர்வு, தாழ்வு, சிநேகம், பகை என இவைபோன்ற உயிர்களைப் பிரிக்கும் வித்தியாசங்கள் தோன்றா. தெய்வ சிந்தனை மேல் நாடி நிற்கும் பொழுது கீழ்ச் சிந்தனைகளெல்லா மற்றுப்போகும். சித்தத்தைச் சிவன்பாலே வைத்தவன் எவ்வுயிரிலும் சிவனையே தரிசிக்கிறான். உலகத்தைத் திருத்த முடியாது. உலகில் எப்பொழுதும்

### நன்மையுந் தீமையும்

### கலந்தேயிருக்கும்

அல்லாவிடில், உலகம் நடைபெறாது. வினை யுண்டாகா விடில் தவம் தானம் முதலிய ஆன்மவீடேற்றத்துக்குரிய முயற்சிகளுக்கிடம்வராது. பொது நன்மைக்காக உலகில் மனிதர் கட்டுப்பாடுகளையேற்படுத்தி யிருக்கிறார்கள். காலத்துக்குக்காலம் அக்கட்டுப்பாடுகள் மாறிக்கொண்டே வருகின்றன. மனிதனால் உண்டாக்கப்பட்ட கட்டுப்பாடுகள் கடக்கக் கூடாத வரம்புகளல்ல. மேலான தொண்டு புரிவதற்கு அக் கட்டுப்பாடுகள் தடையாயிருந்தால் அவைகளைத் தாண்டியும் போதலே உத்தமம். உலகமெல்லாம் இறைவன் சந்நிதானம். ஒரு பொல்லாப்புமில்லை. எப்பவோ முடிந்த காரியம். நாம் அறியோம். முழுதுமுண்மை.

கொல்லா விரதங் குவலயமெல்லா மோங்குக!

சற்குரு நாதன் சரணடி வாழ்க!
வாழ்க! வாழ்க! உயிர்கள் வாழ்க!
ஓம் தத் சத் ஓம்.

—சிவதொண்டன்

---

## ரங்கூனில் சத்தியாக்கிரகிகள்.

## பொலிஸார் தடியடியால் 100 மாணவர்க்குக் காயம்

ஏறக்குறைய எல்லாப்பாடசாலைகளும், கல்லூரிகளும் மூடப்பட்டுவிட்டன. சென்ற 20-ந் திகதி பெருந்தொகையான மாணவிகளும், மாணவர்களும், அரசினர் காரியாலயங்களின் முன்னுட்கார்ந்து, அரசினர் சிப்பந்திகளை உள்ளே நுழையவிடாது தடுத்தனர். அவசரமாக எல்லா வாயில்களும் பூட்டப்பட்டன. சத்தியாக்கிரகிகளின் மேல் இருமுறை பொலிஸார் தடியடிப்பிரயோகஞ் செய்ததன்பயனாகச் சராசரி 16 வயதுள்ள 40 மாணவர்வரை காயமடைந்தனர். பிற்பகல் சத்தியாக்கிரகிகள் கலைந்து போனபோது குதிரைப் படைப் பொலிசார் பயமுறுத்தியதாயும், பின்னும் பொலிசார் தடியாலடித்து எதிர்த்ததாயும், அதன் பயனாகச் சிலசிறுமிகளுக்குங் காயமேற்பட்டதாகவும் கூறப்படுகிறது. பொலிசார்மீதும் கற்களும் மரத்துண்டுகளும் வீசப்பட்டதாகவுஞ் செய்தி கூறுகின்றது. பர்மாவின் பல பாகங்களிலும் சட்டமறுப்பு நடப்பதாகவும், சிறுவரும், சிறுமிகளும் ஊர்வலங்களிற் கலந்துகொள்கின்றனவென்றுங் கூறப்படுகின்றது. பொலிசாரால் காயமடைந்த மாணவர் 100 பேர் எனக் கூறப்படுகின்றது. காரியாலயங்கள் முன் உட்கார்ந்து சத்தியாக்கிரகஞ் செய்த சிறுமிகள் மூர்ச்சையடைந்தனர். நகரமேயர் காயமடைந்தவரை வைத்தியசாலைக் கனுப்பினார்.

"சன்" பத்திரிகாலயம் ஆரம்ப சிகிச்சை ஸ்தலமாக மாற்றப்பட்டிருக்கிறது.

---


### சந்தா விகிதம்

முற்பணமே சட்டவேண்டும்.

மலாய்நாடுகளுக்கு வெள்ளி 5

இலங்கை, இந்தியாவுக்கு ரூபா 2½

### விளம்பர விகிதம்

முற்பணமே கட்டவேண்டும்.

சிறு விளம்பரங்களுக்கு ரூபா 1¼

கலம் ஒன்றுக்கு ரூபா 3


## கபினெற் மந்திரி சபை

இலங்கை அரசாங்கசபையைத் திருத்தியமைப்பதுபற்றித் தேசாதிபதியின் புதிய திட்டம் பின்வருமாறு:

1. பிரதேசவாரியாகத் தெரிவு செய்யப்படும் அரசாங்கசபை ஸ்தானங்கள் 60 நியமன அங்கத்தினர் 6 இவர்களில் நால்வர் ஐரோப்பியர்; இருவர் பறங்கிகள். அவசியமாயின் மேலும் இரு நியமனங்களுக்கதிகாரமுண்டு.

2. நிருவாகசபை அரசியல் முறை நீக்கப்பட்டு மந்திரிசபை முறை (Cabinet System) ஏற்படுத்தப்படும். இப்பொழுதுள்ள 7 மந்திரிகளுக்குப் பதிலாய் 9 மந்திரிகள் நியமிக்கப்படுவர். கூடிய இரு மந்திரிகளில் ஒருவர் பிரதம மந்திரி, மற்றவர், நிதிமந்திரி. சட்ட விஷயம் உள்நாட்டு மந்திரியிடம் ஒப்படைக்கப்படும்.

3. அரசாங்கசபையிலிருந்து அரசாங்க அதிகாரிகள் மூவரும் நீக்கப்படுவர். அவர்களில் நிதிக் காரியதரிசியும், சட்டக்காரியதரிசியும், தேசாதிபதிக்கும், மந்திரிசபைக்கும் ஆலோசனை கூறுபவர்களாயிருப்பர்.

4. பிரதம மந்திரி மற்ற மந்திரிகளோடு ஆலோசனைசெய்து, தேசாதிபதியின் அங்கீகாரத்தோடு உதவி மந்திரிகளை நியமிப்பார்.

5. அரசாங்க சபையில் அதிக ஆதரவுள்ளவராகத் தாம் கருதும் ஒருவரைப் பிரதம மந்திரியாகத் தேசாதிபதி நியமிப்பார். பிரதம மந்திரியோடு ஆலோசனைசெய்து மிகவுந் தகுதியுள்ளவர்களை மற்ற மற்ற மந்திரிகளாகத் தேசாதிபதி நியமிப்பார். சிறுபான்மையோரும் மந்திரிசபையில் இடம்பெறவேண்டும்.

6 வெளியிலிருந்தொருவர் தேசாதிபதியின் பிரதம காரியதரிசியாக நியமிக்கப்படுவார். இவர் தேசாதிபதியில்லாதபோது அவருக்குப்பதிலாகத் தேசாதிபதியாகக் கடமைபார்ப்பசர்.

7. "பப்ளிக் சேர்விஸ் கம்மிஷனில்" இப்பொழுதிருப்பவர்களோடு வேறு மூன்று உத்தியோகப்பற்றற்ற அங்கத்தினர் தேசாதிபதியால் நியமிக்கப்படுவர்.

கதைப்பகுதி

# சுந்தரன்செய்த தந்திரம்

(முன்தொடர்ச்சி)

நான் வீண் காவாலிகளுடன்கூடி அவர்களைக் குடிக்கத் தின்னக் கொளுக்கப்பண்ணினதால் அவர்கள் எனக்கென்ன நன்மைசெய்தார்கள். இனியாகிலும் அவர்களை என்வேலையில் அமர்த்தி நான் தந்திரயுத்தியைக்கொண்டு பிழைக்கவேண்டும். அதற்கு இருந்தஇடத்தில் வேலைதான் தக்கது. கூட்டாளிகளும் அதற்கே இசைவார்கள். நம்மூர்ச் சனங்களைச் சாஸ்திரம் மந்திர முதலிய தந்திர யுத்தியைக் கையாடினால் வசியப்படுத்திக்கொள்ளலாம். அதை லகுவில் நம்பியும் விடுவார்கள். ஆதலால் நான் "சுந்தரசோதிடமந்திரம்" என ஓர் இடமமைத்து அதிலிருந்து உள்ளஉள்ளபடி சாஸ்திரஞ்சொல்வதாய் நம் கூட்டாளிகள்மூலமாய் எவ்வூர்களுக்குந் தெரிவித்துப் பொருளீட்டலாமென யோசித்தான். அதைப் பின்பு புனராலோசனை செய்து அதுவேதக்கதெனக்கண்டான். ஆதலால் தன்னிடம் எஞ்சியிருந்த பொருட்களிற் சிலவற்றைக் காசுக்கடையில் தன் கூட்டாளிகளிடம் அனுப்பி விற்பித்து ஓர் சோதிடமந்திரமும் அதற்கப்பால் வந்தவர்கள் தங்கும் தலைவாயலுங் கட்டிச் சுற்றுப்பாகங்களை நன்றுயடைத்துப் பின்புறத்தில் ஓர் வாயில்விட்டுத் தலைவாயிலுக்கு ஒரேவாயில் மாத்திரம் வைத்துக்கொண்டான். பின் தம் கூட்டாளிகளை அழைத்துக் குடிக்க உண்ணத் திருத்தியாய்க் கொடுத்துச் செலவுக்குப் பணமுங் கொடுத்துச் சொல்லுகிறான் நண்பர்களே இதுவரையும் நான் என் சாமார்த்தியத்தால் ஒரு குறையுமின்றி வாழ்ந்தேன் என்பது உங்களுக்குத் தெரியும். இனி என் தந்திரப்பிழைப்பின் வழக்கப்படி நான் ஊருட்செல்ல இயலாதிருக்கிறது. என் போலியரைக் கண்டால் பிடிக்கவும் ஆக்கினைசெய்யவும் ஆராய்ச்சிமாரும் வேறு சிலரும் கங்கணங்கட்டியிருப்பதாய்த் தெரியவருகிறது. நான் "கிடந்துநுழைபவரின் கீழே நுழைபவன் அல்லவா? அவர்கள்கைக்கு அகப்படுவேனோ? இனிக் கொஞ்சக்காலம் அவ்வித பிழைப்பிற் செல்லாமல் வேறுவழியிற் பொருளீட்ட எண்ணுகிறேன். அது உங்களுக்கும் நன்மையாயிருக்கும். நீங்கள் ஒவ்வொரு ஊருக்கு ஒவ்வொருவர் வெவ்வேறலுவலைச் சாட்டிச் சென்று தொல்புரத்தில் "சுந்தரசோதிஷர்" என்னும் மகான் இருக்கிறார்: அவர் எச்சங்கதிகளையும் உண்மைப்படியே சொல்லிவிடுகிறார்: வருகிறவர்கள் எல்லோரும் அவரை வாழ்த்திச்செல்லுகிறார்கள். வருங்காலம் செல்காலம் நிகழ்காலம் எல்லாஞ்சொல்லிவிடுகிறார். வெள்ளி செவ்வாய்க் கிழமைகளில் காலை 9 மணிக்கும் 11 மணிக்குமிடையில் மாத்திரமே அவர் சாஸ்திரஞ்சொல்வது. தெட்சணை ஆளுக்கு ஒருஇறைசால்தான். (இறைசால் என்பது 75 சதம்) என்று கதையைப்பரப்பி வாருங்கள் என்றான். இதுகேட்ட மாத்திரத்தில் அவர்கள் மிகு சந்தோஷத்துடன் விரைந்துசென்று சந்திகளிலும் சந்தைகளிலும் வீட்டிலும் நாட்டிலும்சென்று கதைகளைப்பரப்பிச் சுந்தரனை உச்சநிலையில் வைத்துப் பேசிவிட்டு வந்துவிட்டார்கள்.

## சுந்தரனின் சாஸ்திரபலிதம்

அடுத்த செவ்வாய்க்கிழமைத்தினம் சுந்தரன் தேகாதியந்தம் விபூதிதாரணஞ் செய்து காவிவஸ்திரமணிந்து உருத்திராட்சமாலைபூண்டு புலித்தோலாசனமீது வீற்றிருந்து கூட்டாளிகளை அழைத்துச் சொல்லுகிறான். என் கூட்டாளிகளே, உங்களில் ஒருவன் தலைவாயில் உட்புறத்தில் பணம்வாங்கித் துண்டுகொடுக்கும் வேலையிலிருக்கட்டும். அவன் ஒவ்வொரு துண்டுக்கும் இலக்கமிட்டுக் கொடுக்கட்டும். மற்றவர்கள் வந்தவர்களுடன் வெளியிலிருந்து சம்பாஷிக்கட்டும். அவர்களும் தாங்களும் சோதிடங்கேட்க வந்ததாய் இன்னகாரியத்தைக்குறித்துக் கேட்கப்போகிறோமென்ன. வந்தவர்களும் தங்கருமத்தைச் சொல்லுவார்கள். அதையறிந்துகொண்டு ஒவ்வொருவனும் வா உங்களில் ஒருவன் புறப்பட்டு அவன் கேட்கும் சங்கதிகளை ஒரு துண்டிற் குறித்துக்கொண்டு பிற்பக்கத்தால் வந்து அங்குகாணும் துவாரத்தில் போட்டால் அது என் மேசை இலாச்சிக்குள் வந்து விழும்படி சூழ்ச்சி செய்திருக்கிறேன். அப்படிச்செய்வதில் காரியங்களை மட்டிட்டறியாவண்ணம் உபாயமாய்ச் செய்யுங்களென்று சொல்லியனுப்பினான். அவ்விதமே அவர்கள் வெளித் தலைவாயிலிற் போயிருக்கும்போது சிலர் வந்தார்கள். அவர்களுடன் வார்த்தையாடித் தாம் பிறர்போல் நடித்துக் கருமத்தையறிந்துகொண்டு சுந்தரன் சொற்படி ஒருவன் போய்த் துண்டு எழுதிப் போட்டுவிடுவான். அதைக்கண்டே "வல்லவன்பம்பரம் மணலிலும்ஆடும்" என்றபடி முகக்குறிப்புகளையும் கேள்விகளையுங் கிரகித்துத் தக்கபடி கூட்டிக்குறைத்துச் சமாளித்துவிடவே எல்லோருந் திகிற்பட்டு இவர் திரிகாலக்கியானி எனப்புகழ்ந்து வீடுசென்றார்கள். அத்தின வருமானம் ஐம்பது இறைசாலுக்கு மேலாயிற்று. அப்படியே அடுத்த வெள்ளிக்கிழமை அதிலும் இரட்டித்தொகை வரும்படியாயிற்று. சுந்தர சோதிஷரின்கீர்த்தி இன்னும் அதிகமாய் ஊரிற்பரம்பவே அடுத்த செவ்வாய்க்கிழமை திரள்திரளாய் வண்டிகளிலும் பாதசாரிகளாயும் சனங்கள் வந்து குவிந்துவிட்டனர். அத்தருணம் வந்தவர்கள் தலைவாயிலிலிருக்க இடம் போதவில்லை. என்றாலும் அதற்குமுன் துண்டுகொடுத்த 25 பேரன்றி மற்றையோரை வெள்ளிக்கிழமை வரும்படி தவணைபோடப்பட்டது. அப்படியே சிலர் திரும்பிச்சென்றாலும் சிலர் இரட்டிப்புத்தொகை தருகிறோமென்று வேண்டிக்கொண்டமையால் வேறு 20 பேருக்கு 11 மணிக்குத் துண்டுகொடுக்கப்படுமென்று தெரிவிக்கப்பட்டது. அப்படியே பலர் காத்திருந்தனர். துண்டுகொடுக்கப்பட்ட 25 பேருமே தலைவாயிலிலிருக்க இடம்பெற்றனர். சங்கதிகளை விசாரிக்குங் கூட்டாளிகள் "ஆரியப்பாவையானாலும் காரியத்திலேகண்" என்றபடி தங் கருமத்திற் சிந்தைவைத்துப் பிரயாணிகளின் சங்கதியை விசாரிக்கத்தொடங்கினர். அப்படியே விசாரணைசெய்து முடிந்தவைகளை இலக்கநிரைப்படியே அனுப்பிவிட்டுத் தமது முந்திய தந்திரயுத்திப்படியே சங்கதிகளைச் சுந்தரனுக்குத் தெரிவித்தனர்.

## குருமூர்த்திச் செட்டியின் சந்தேகம்

அவ்விதமே சாஸ்திரங் கேட்டுத் திருப்தியடைந்து 24 பேர் செல்ல அராலியில் வசிக்கும் குருமூர்த்திச்செட்டி என்னும் ஓர் விவேகி ஈற்றில் சாஸ்திரங் கேட்கப்போனான். அத்தருணம் தனக்குச்சொன்ன சாஸ்திரத்தில் சந்தேகமுற்று மற்றவர்கள் செல்வதையும் கூட்டாளிகள் ஓடியாடித்திரிவதையுங் கவனித்துக்கொண்டு பக்கத்தினின்றான். துண்டு கொடுப்பவன் 11 மணிக்கு வேறு 20 பேருக்குத் துண்டுகொடுக்கவே அவர்களுடனேயும் இக்கூட்டாளிகள் அவாவாய்ச் சம்பாஷிப்பதைப் பார்த்தான். அவருள் ஒருவனைச் சாடைகாட்டிக் கூட்டிப்போய் நீ வந்தகருமத்தை ஒருவரிடமுஞ் சொல்லாதே; கேட்டால் வேறு விஷயத்தைச் சொல்லிவிடு; சாஸ்திரங் கேட்டுமுடிவில் என்னையுஞ் சந்திக்கவேண்டுமென்று கேட்டுக்கொண்டான். அதற்கு அவனுஞ் சம்மதித்துக் குறித்த முறை வந்தவுடனேசென்று சாஸ்திரியார்முன் நின்றான். அவனோ ஓர் வியாச்சியத்தைக் குறித்துக் கேட்கப்போனவன்.

(தொடரும்)

# பெரியபுராணப் பெரியோர்

## திருநாவுக்கரசு சுவாமிகள் சரித்திரம்

எழாலை திரு. சே. சின்னத்துரை ஆசிரியர் அவர்கள்

திருநாவுக்கரசு சுவாமிகள் சிதம்பரத்தை வணங்கியபின் சீர்காழிக்குப் போகப் புறப்பட்டார். அப்பர்சுவாமிகள் அங்கு வருவதைக் கேள்வியுற்ற திருஞானசம்பந்தப்பிள்ளையார் அதிக சந்தோஷமடைந்து அவரை எதிர்கொண்டழைக்கச் சென்றார். அப்பொழுது தொண்டர் குழாம்புடை சூழவும் கண்டவர்களுடைய மனம் கசிந்துருகத் தகுந்த கருணை புறம்பொழிந்துகாட்ட சீர்காழியின் பக்கத்தை அடைந்தார். திருஞானசம்பந்தப்பிள்ளையார் அப்பர்சுவாமிகளைத் தொழுது வணங்கினார். அப்பர்சுவாமிகள் அவரைக் கையால் எடுத்தணைத்தார். பிள்ளையார் அப்பரே என்றார். அப்பர் சுவாமிகளும் அடியேன் என்றார். இங்ஙனம் இரண்டு பெருமக்களும் ஒருவரிலொருவர்கொண்ட அன்பைக்கண்ட அடியார்கள் அரகரவென்று சொல்லி ஆரவாரித்தார்கள். இருவரையும்பற்றி சேக்கிழார் குறிக்கின்றது கவனிக்கத்தக்கது. "அருட்பெருகு தனிக்கடலு முலகுக்கெல்லாமன்பு செறிகடலுமாமெனவுமோங்கும் பொருட் சமயமுதற் சைவ நெறிதான் பெற்ற புண்ணியக் கண்ணிரண்டெனவும்" என்று இருபெருமக்களைப்பற்றி கூறப்பட்டிருக்கிறது. அப்பர் சுவாமிகள் திருத்தோணியில் வீற்றிருக்கும் பெருமானை வணங்கிச் சீர்காழியில் சிலநாள் தங்கியிருந்தார். பின் கருப்பறியலூர், நீமூர்நின்றியூர், கோடிக்கா திருவிடைமருதூர் முதலியஸ் தலங்களை வணங்கி திருச்சத்தி முற்றத்திற்கு வந்தார். அங்கே "கோவாய் முடுகி" என்ற சொற்களை முதலாகவுடைய தேவாரத்தைப் பாடி "பூவாரடிகள் என்தலைமேற் பொறித்து வைப்பாய்" என்று பாடினார். சிவபெருமான் அதற்கு திருநல்லூருக்கு வரும்படியாக அருள் புரிந்தார். நன்மை பெருகும் நல்லூரை அப்பர் சுவாமிகள் வந்து அடைந்து பெருமானை வணங்கியெழும் சமயத்தில் அவருடைய நினைப்பை முடிப்பதற்கு சிவபெருமான் தமது பாதமலரைச் சூட்டினார். அப்பர் சுவாமிகள் "நனைந்தனைய திருவடி" என்ற சொற்களை முதலாகவுடைய தேவாரத்தைப் பாடினார். திருநல்லூரில் சில காலம் உழவாரத் தொண்டு செய்துகொண்டிருந்தார். பின் திங்களூருக்குச் சென்றார். ஒரு தெருவீதியில் "திருநாவுக்கரசு" தண்ணீர்ப்பந்தல் என்று எழுதியிருப்பதைக்கண்டு பக்கத்தில் நின்றவர்களை அதை எழுதியவர் யாவர் என்று கேட்டார். அவர்கள் அதை எழுதிய அப்பூதிஅடிகள் என்னும் ஒரு பிராமணர் என்றும் அவர் மிக சமீபத்தில் உளரென்றும் கூறினார்கள். அவர்கள் அப்பர்பெருமானை அழைத்துச்சென்று அவருடைய வீட்டைக் காட்டினார்கள். அப்பூதி அடிகளோ திருநாவுக்கரசு நாயனாரை ஒருபோதும் காணாதவராயினும் அவர் சூலைநோயினால் ஆட்கொள்ளப்பெற்றகாலம் தொடங்கி அவரை இடையறாது தியானிப்பதும் தமது வீடு, பிள்ளைகள், குளம் தண்ணீர்ப்பந்தல் முதலியவற்றிற்கெல்லாம் திருநாவுக்கரசு என்னும் நாமத்தைச்சூட்டி இன்புற்று வருவாராயினார். அப்பர்சுவாமிகள் அங்குசென்றவுடன் அவரை ஓர் மெய்யன்பர் என நினைத்து ஆசனத்திருத்தி உபசரித்தார். தண்ணீர்ப்பந்தரில் அப்பூதி அடிகளின் பெயரை எழுதாது திருநாவுக்கரசு என்னும் பெயர் எழுதியது யாதுகாரணம் பற்றி என்று வினவினார். அதற்கு அப்பூதி அடிகள் வெருண்டு சூலைநோயாற் றடுத்தாட்கொள்ளப்பெற்ற ஒரு பெரியாரின் நாமத்தை எழுதாதுவிடுதல் முறையா என்றும் அவர் யாவர் என்றும் ஓர் ஆச்சரியத்துடனும் கேட்டார். சூலைநோயினால் தடுத்தாட்கொள்ளப்பெற்ற சிறுமையேன் யான் என்று அப்பர் சுவாமிகள் கூறினார். உடனே அப்பூதிஅடிகள் அற்றவர்கள் அருநிதியம் பெற்றாற்போல் அதிக சந்தோஷமடைந்து ஆடினார் பாடினார் வணங்கினார். பின் அப்பர்சுவாமிகள் திருவமுது செய்வதற்குவேண்டிய ஒழுங்குசெய்யப்பட்டது. மூத்தபிள்ளையாகிய மூத்ததிருநாவுக்கரசு வாழைக்குருத்து அரிந்து வரும்படியாக அனுப்பப்பட்டார். அப்பையன் வாழைக்குருத்தை அரியும் சமயத்தில் ஓர் நாகம் அவரைத் தீண்டியது. உடனே அப்பையர் ஓடி வாழைக் குருத்தை தாயினுடைய மடியில் வைத்துவிட்டு இறந்தது. பெற்றோர்கள் தமது இறந்தபுதல்வனை மறைத்துவிட்டு அப்பர்சுவாமிகளை அமுது செய்யும்படிகேட்டார்கள். அப்பெருமான் திருவருட்குறிப்பினால் நடந்ததை அறிந்து மூத்த திருநாவுக்கரசை வரும்படியாகக் கேட்டார். பெற்றார் அவருக்கு ஒழிக்க முடியாமல் நடந்ததைக் கூறினார்கள். அப்பொழுது அப்பர் சுவாமிகள் இறந்த புதல்வனை கோயிலுக்குக் கொண்டுவரும்படி செய்து "ஒன்றுகொலாமவர்" என்ற சொற்களை முதலாக வுடைய தேவாரத்தைப் பாடினவுடன் புதல்வன் உயிர்பெற்றெழுந்தார். பின் அப்பர் சுவாமிகள் அப்பூதி அடிகள் வீட்டில் திருவமுது செய்தார். கும்பகோணம் முதலிய ஸ்தலங்களை வணங்கிக்கொண்டு திருவாரூருக்கு வந்து சேர்ந்தார். கல்லே தோணியாகக்கொண்டு கரையேறினவராகிய திருநாவுக்கரசு பெருமானை அங்கு எய்தப்பெற்றோம் என்ற மகிழ்ச்சியினால் தமது நகரத்தை அலங்கரித்துத் திருவாரூர்த் தொண்டர்கூட்டங்கள் அப்பர்சுவாமிகளும் தியாகராசப்பெருமானை நேரே கண்டு மனம் நெக்குருக உரோமாஞ்சிதம்கொள்ள வணங்கிக் "காண்டலே கருத்தாய்" என்ற சொற்களை முதலாகவுடைய தேவாரத்தைப் பாடினார். சிலகாலம் அங்கு தங்கி வேண்டிய காலங்கள்தோறும் சிவபெருமானை வணங்கிப் "பாடிளம் பூதத்தினாலும் என்னும் தேவாரம் பாடினார். தம்மால் பாடப்பெற்ற தேவாரத்தில் நமிநந்தி அடிகள் செய்த திருத்தொண்டைச் சிறப்பித்துப் பாடினார். பின் வேறு இடங்களுக்குச் சென்றார். மீண்டும் திரும்பித் திருவாரூருக்கு வந்து வணங்கித் திருப்புகலூருக்குச் சென்றார்.

இப்பத்திரிகை யாழ்ப்பாணம், வயாவிளான் திரு. சி. நல்லதம்பி என்பவரால் மேற்படியூர் "கோதைப்பிள்ளைசீமா" விலுள்ள ஆனந்தகுமரன் அச்சுநிலையத்தில் 1938-ம் வருஷம் மார்கழிமீ 31-ந்திகதி சனிக்கிழமை அச்சிடுவிக்கப்பெற்று வெளியிடப்பெற்றது.